Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

# வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 64 பாபிலோன் ஆறுகள் அருகே நாங்கள் உட்கார்ந்து, அங்கே சீயோனை நினைத்து அழுதோம் சங்.137:1 ஜுன் 2018 No.6

## தூய ஆவியானவரின் இயற்கைக்கு மேலான வல்லமை நமக்கு தேவை

***We need the supernatural power of the Holy Spirit***

Fred D. Jarvis

இக்கட்டு நிறைந்த ஒரு காலத்தில் வாழுகிறோம். பொருளாதார, அரசியல், சமூக, சுற்றுப்புற, கல்வி சார்ந்த பிரச்சினைகள் உலகில் காணப்படுவது மட்டுமல்ல ஆவிக்குரிய பிரச்சினைகளும் காணப்படுகின்றன. இந்த நல்லொழுக்க மற்ற, பாவம் நிறைந்த தலைமுறை யினைத் திரும்ப தேவனிடம் கொண்டு வருவது எப்படி? வல்லமையைப் பெற்றுக்கொள்ளும் வழியையும், வெற்றியின் இரகசியத்தையும், விசுவாசத்தின் சக்தியையும், பரிபூரண ஜீவனையும் தேடவேண்டிய காலமிது. நோய் கொண்ட நமது சபை பழைய பாதைக்குத் திரும்ப வேண்டும். சபை விழித்தெழும்ப வேண்டும். கிறிஸ்து விரைவில் வருகிறார்.

நாம் தேவனைத் தேடவும் அவரது சத்தத்தைக் கேட்கவும் அவரது சித்தத்திற்கு நம்மை ஒப்புவிக்கவும் இது காலமாயிருக்கிறது. திறப்பில் நிற்கவும் சுவரை அடைக்கவும் தக்கதாக ஒரு மனுஷனை அவர் தேடுகிறார். எசேக்.22:30. அவரது வல்லமையால் தரிப்பிக்கப்பட்டு அவருடைய அதிகாரத்தோடு பேசக்கூடிய மக்களை அவர் தேடுகிறார். நாம் வாழும் இக்காலத்திற்கு ஏற்ற பாரத்தால் தொடப்பட்ட மக்கள் வேண்டும். நமது தேவன் ஜீவிக்கிறார்! அவர் வல்லவர்!

நாம் எப்படி தேவனுடைய சன்மார்க்க மற்றும் ஆத்மீக நியதிகளுடன் ஒத்துழைப்பது என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும். தேவன் காட்டும் ஒரே வழியில், ஒரே நோக்கத்தோடு தேவ சித்தத்தைப் பின்பற்றும் மக்கள் தேவை. தேவ நாம மகிமைக்காக, வல்லமையைப் பெற்றுக் கொள்ளவும், சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொள்ளவும் முற்றிலும் சேனாபதியைப் பின்பற்றி பலத்த போர்க்களத்திற்குச் செல்லுகிறவர்களுமான தேவ மக்களுக்காக தேவன் காத்துக்கொண்டிருக்கிறார்.

இதற்காக நாம் நம்மைத் தாழ்த்தி, ஜெபித்து தேவனுடைய முகத்தைத் தேடி நம்முடைய பொல்லாத வழிகளை விட்டு திரும்ப வேண்டும் 2 நாளா.7:14.

தேவ ஆவியானவரின் வல்லமையான ஒரு அசைவாடுதல் இன்று அவசியம். ஆவிக்குரிய நிர்விசாரத்திற்கு ஒரே பரிகாரம் எழுப்புதல் ஒன்றே. ஆசீர்வாதத்திற்கான திறவுகோல் ஆவியானவரின் பொழிதல் மட்டுமே. இல்லாவிட்டால் நாம் ஒரேயிடத்தில் நிலையாக நின்றுவிடுவோம். இன்றே தேவனிடமிருந்து ஒரு உயிர்ப்பித்தல் நமக்கு வேண்டும். சங்கீதக்காரன் 119-ம் சங்கீதத்தில் 9 முறை தன்னை உயிர்ப்பிக்கும்படி வேண்டுதல் செய்கிறார். அவருக்கு இது தேவையானால் நமக்கு இன்று எத்தனை அவசியம்!

### ஆவிக்குரிய வல்லமையின் தேவை

அதிக வல்லமை நமக்குத் தேவை. வல்லமை தேவனுடையது சங்.62:11. பவுல் வல்லமையோடும் தூய ஆவியானவரிலும் பிரசங்கித்தார் 1 தெச.1:5. "பலத்தினாலுமல்ல, பராக்கிரமத்தினாலுமல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும்" சக.4:6 என்று ஆண்டவர் கூறினார். இயேசு ஆவியின் வல்லமையால் கலிலேயாவுக்கு வந்தார் லூக்.4:14. "கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து, அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய் சாட்சி கொடுத்தார்கள். அவர்களெல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது" அப்.4:33. "நானோ யாக்கோபுக்கு அவன் மீறுதலையும், இஸ்ரவேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்கும்படி கர்த்தருடைய ஆவி அருளிய பலத்தினாலும், நியாயத்தினாலும், பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறேன்" மீகா.3:8.

"பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" அப்.1:8. "அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" மத்.28:18 என்றார். "..... நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்" லூக்.24:49. தூய ஆவியானவரின் வல்லமை ஒன்றே நமது அனைத்து குறைகளுக்கும் நிவாரணமாயிருக்கிறது. பாவம் நமது ஆவிக்குரிய செட்டைகளை கத்தரித்து, நம்மை செயல்படாமலாக்கி விடும். ஆனால் தூய ஆவியின் வல்லமையால் நாம் பலனற்றவர்களாகவோ, வெறுமையாகவோ, உதவியற்றவர்களாகவோ இருக்கமாட்டோம்.

### வழிந்தோடும் ஆவிக்குரிய வாழ்வு

ஆவிக்குரிய வல்லமை சாத்தியமானது மட்டுமல்ல அது வாக்குப் பண்ணப்பட்டது அப்.2:38,39. நாம் ஆவியில் நிரம்பியிருக்க கட்டளை பெற்றுள்ளோம் எபே.5:18. நாம் தேவனுடைய மிகப்பெரிய வல்லமையோடு தொடர்புடையவர்களாயிருக்க வேண்டும். நமது வாழ்வில் தூய ஆவியானவரின் இயற்கைக்கு மேலான அந்த வல்லமை நமக்கு வேண்டும். அவர் நமக்கு தைரியத்தை அளித்து சாட்சிகளாக நிறுத்துவார். அவர் நமது காதுகளையும், கண்களையும் திறந்து நமது நாவின் கட்டுகளை அவிழ்ப்பார். ஆவியின் கனியை நம்மில் தருவார். கலா.5:22,23. ஜீவ தண்ணீர் ஊற்றை நம்மில் உருவாக்குவார். யோவா.7:37-39. ஆர்ட்டீஷியன் ஊற்றினைப் போல நமது வாழ்வு ஆசீர்வாதங்களால் நிரம்பி வழியும்.

நாம் சுவையற்ற வாழ்வினை வாழ தேவன் விரும்பவில்லை. நாம் ஆவியினால் பிறந்து ஆவியினால் நிரப்பப்பட்டவர்கள். ஆத்தும ஆதாய வலிமையை நாம் கேட்க வேண்டும். ஆவியின் ஆழமான அனுபவங்கள் நமக்கு வேண்டும். தேவனுடைய சகல பரிபூரணத்தினாலும் நாம் நிரம்ப வேண்டும் எபே.3:19. சிலுவையிலறையப்பட்ட அனுபவத்தோடு நாம் வாழ வேண்டும் கலா.2:20.

இன்று மிக இன்றியமையாத தேவை ஆவியால் நிரப்பப்பட்ட கிறிஸ்தவர்களென்றால் மிகையல்ல. தேவன் தமது வல்லமையை உயரத்திலிருந்து நம்மீது ஊற்றி, நமது பாவங்களிலிருந்து நம்மை மீட்டு நம்மை அவருக்கு அர்ப்பணிக்க விரும்புகிறார். அனேகக் கிறிஸ்தவர்களின் வாழ்வில் தூய ஆவியின் வல்லமை காணப்படவில்லை.

அப்போஸ்தலர்களின் வாழ்வில் காணப்பட்ட தேவ வல்லமையை நமக்கு சொந்தமாக்குவோம். ஆவிக்குரிய நிலையில் நாம் வெறுமையும் எளிமையுமாயிருக்கக்கூடாது. நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் வாய்ப்பினை பயன்படுத்தாமலிருக்கக்கூடாது. ஆவிக்குரிய அந்தகாரத்தில் நாம் தடவித் திரியக் கூடாது.

நாம் ஆவிக்குரிய அரக்கர்களாக பெலன் நிறைந்து காணப்படவேண்டும். தேவனை ஒருமுறைகூட சந்திப்போம். அவரது வார்த்தைகள் தரமானவை.

(3-ம் பக்கம் பார்க்க)

# வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

முகவரி: வருகையின் தூதன் நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் – 629 001
**Mobile:** 95432 21008 **e.mail:** varukayinthoothan@hotmail.com

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony


## வாக்குத்தத்தம்

தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.

அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார். *சங்கீதம் 145:18,19*

## வாசகருக்கு என் அன்பு கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

ஜுன் மாத பத்திரிக்கைக்காக என் தேவனை நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன். முதலாவது ஒரு வயதான வாசகரின் கடிதத்தை கீழே அச்சிடுகிறேன். அவரின் பெயரும், எனது தகப்பனாரின் பெயரும் ஒன்றுபோல இருக்கும். இவர் அநேக வருடங்களாக, வருடத்திற்கு ஒரு முறை வருகையின் தூதன் ஊழியத்திற்கு ஒழுங்காக உதவி செய்து வருவதை அடியேன் அறிவேன். Western Union Bank வழியாக அவர் அனுப்பும் பணத்தை நானே தபால் நிலையத்திற்கு நேரில் சென்று I.D. நம்பர் மூலம் பெற்று வருகிறேன், தேவனுக்கே மகிமை.

மலேசியா, 05.03.2018

கிறிஸ்துவுக்குள் அன்பான பாஸ்டர் ஐயா அவர்களுக்கு கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரன் S. தேவதாசன் எழுதுவது, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஸ்தோத்திரம்.

தாங்கள் செய்கிற ஊழியத்திற்கென்று 19.02.2018-ல் (1624 ரூபாய்) ஆயிரத்து அறுநூற்றி இருபத்து நான்கு ரூபாய் Western Union Bank மூலமாய் அனுப்பியிருக்கிறேன், தயவுசெய்து பெற்றுக்கொள்ளுங்கள். தங்களுக்காகவும், தாங்கள் ஊழியத்திற்காகவும் ஜெபிக்கின்றோம். எனக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். கர்த்தர் தாங்கள் செய்கிற ஊழியத்தை அதிகமாய் ஆசீர்வதிப்பாராக.

கர்த்தராகிய இயேசுவுக்குள் அன்பான சகோதரன்
**S. தேவதாசன்**

“அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி **இரவும் பகலும்** கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று (கர்த்தராகிய நான்) உங்களுக்குச் சொல்லுகிறேன்” லூக்கா 18:1-8 வரை வாசியுங்கள். நீங்கள் **இரவும் பகலும்** கூப்பிடுகிறீர்களா?

| கடிதங்கள், காணிக்கை, ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி: | வங்கி கணக்கு எண் |
|---|---|
| **வருகையின் தூதன்**<br>நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் – 629 001<br>VARUKAYIN THOOTHAN<br>Newport Street, Nagercoil-629 001.<br>**Mobile:** 95432 21008<br>**email:**<br>Varukayinthoothan@hotmail.com | VARUKAYIN THOOTHAN<br>A/c. No.:431521036<br>Indian Bank,<br>W.C.C. Road, Nagercoil-1<br>IFS Code : IDIB000N006<br>வங்கி வழியாக பணம் அனுப்பினால், தொலைபேசி, ஈமெயில், SMS வழியாக உடனே எங்களுக்கு தெரிவியுங்கள் |

“உன் தேவன் எங்கே என்று அவர்கள் நாள்தோறும் என்னிடத்தில் சொல்லுகிறபடியால், **இரவும் பகலும்** என் கண்ணீரே எனக்கு உணவாயிற்று” சங்.42:3.

கோயம்பத்தூர் சிட்டி A.G. சபை உபவாச ஜெபத்திற்காக அடியேன் ஜெபத்தோடு ஆயத்தப்பட்ட பொழுது, எனக்குள்ளே ஒரு எண்ணம் உண்டாயிற்று. அதன்படி, ரகசியமாய் கில்ட் போட்ட பெரிய சிப் பைபிள் ஒன்றை விலைக்கு வாங்கி வைத்திருந்தேன். தரிசன செய்திக்கான வசனம் எரேமியா 9:1-யை வேத புத்தகத்தை திறக்காமல் மனப்பாடமாக சொல்லுகிறவர்களுக்கு ஒரு பரிசு என அறிவித்தேன். அநேகர் அமைதியாய் இருந்தார்கள். கடைசியாக ஊழியம் செய்கிற ஒரு அருமையான சகோதரி வசனத்தைச் சொல்லி சபையின் போதகர் கையால் அழகான அந்த வேத புத்தகத்தை கூடிவந்திருந்த மக்கள் கரங்களைத் தட்ட பெற்றுக்கொண்டார்கள், தேவனுக்கே மகிமை.

“ஆ, என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும்; அப்பொழுது என் ஜனமாகிய குமாரத்தி கொலையுண்ணக் கொடுத்தவர்கள் நிமித்தம் நான் **இரவும் பகலும்** அழுவேன்” எரேமியா 9:1.

எனக்கு மிகவும் அருமையான தேவ ஜனமே, கிறிஸ்து அற்ற கல்லறைக்கு நேராகச் செல்லும், ஆயிரம் ஆயிரமான அழியும் ஆத்துமாக்களுக்காக **இரவும் பகலும்** அழுவீர்களா? உங்கள் கண்களில் கண்ணீர் எங்கே? இந்த ஒரே நோக்கத்தோடேயே நாம், **“எழுப்புதலுக்காக இதய கதறல்”**, உயிர்மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம் நடத்தி வருகிறோம்.

ஆரம்ப நாட்களில் சுமார் 28 ஆண்டுகள் ஒரே இடத்தில் கூடி உபவாசித்து ஜெபித்தோம். அடுத்த கட்டமாக, அடுத்த மாவட்டங்களான தூத்துக்குடி, பாளையங்கோட்டை, சிவகாசி ஆகிய இடங்களில் இவ்விதமான உபவாச ஜெபங்களை நடத்தினோம். அடுத்த கட்டமாக **மாதந்தோறும்** உபவாசித்து ஜெபிக்க கர்த்தர் வழிநடத்தினார்.

அடுத்த கட்டமாக 2018-ம் ஆண்டு வெளிமாநிலங்களிலும் இவ்வித உபவாச ஜெபங்களை நடத்த தேவனே இரக்கம் பாராட்டி வருகிறார். குறிப்பாக இந்த ஆண்டு மார்ச் மாதம் பாண்டிச்சேரியிலும், ஏப்ரல் மாதம் மஹாராஷ்டிரா மாநிலம் மும்பையிலும் இவ்வித உபவாச ஜெபங்களை நடத்த தேவன் இரக்கம் பாராட்டினார்.

**மேய் மாதம் 19-ம் தியதி** 3-வது சனிக்கிழமை, தஞ்சாவூர் கிரேஸ் அசெம்பிளி ஆப் காட் சபையில் கர்த்தருக்குச் சித்தமானால் உபவாச ஜெபம் நடைபெற்றிருக்கும். அந்த சபையின் போதகரும், எனது நண்பருமான பாஸ்டர் **J. ஜெயச்சந்திரன்** அவர்கள் மார்ச் மாதம் மரித்து போனபடியால் அவருடைய மனைவி உபவாச ஜெபத்தை நடத்த தயங்கினார்கள். தேவ தயவால் எனது மகன் சாமுவேல் தஞ்சாவூருக்கு நேரில் சென்று உபவாச ஜெபத்தை ஒழுங்கு செய்ய அன்பின் ஆண்டவர் உதவி செய்தார். காலதாமதம் ஆனபடியால் பத்திரிகையில் விளம்பரபடுத்த இயலவில்லை.

**ஜுன் மாதம் 9-ம் தியதி** 2-வது சனிக்கிழமை, எனது நண்பரும் தேவ ஊழியருமான பாஸ்டர் **ஜான் R.இளங்கோவன்** அவர்கள் பொறுப்பெடுத்து, மைசூர் பட்டணத்திலுள்ள அவர்களுடைய Indian Christian Revival Movement ICRM central Church-ல் ஒழுங்கு செய்துள்ளார்கள். தனியாக விளம்பரம் போடப்பட்டுள்ளது.

**ஜுலை மாதம் 21-ம் தியதி** 3-வது சனிக்கிழமை, கன்மலை ஆராதனை சபை, நல்லிக்குப்பம், கடலூர்.

**ஆகஸ்ட் மாதம் 18-ம் தியதி** 3-வது சனிக்கிழமை, விசுவாச ஜெபவீடு, கல்லக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டம்.

**செப்டம்பர் மாதம் 15-ம் தியதி** 3-வது சனிக்கிழமை, **A.G.** சபை, மதுரை மெயின் ரோடு, தேனி.

**அக்டோபர் மாதம் 13-ம் தியதி** 2-வது சனிக்கிழமை, ஷைலோ சுவிசேஷ மிஷன் (Shiloh Evangelical Mission) அந்தமான்.

கர்த்தருக்கு சித்தமானால் அக்டோபர் மாதம் அந்தமானில் நடைபெற இருக்கும் உபவாச ஜெபத்திற்கு

(8-ம் பக்கம் பார்க்க)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### ஒரு உயரிய வாழ்வுக்கான அழைப்பு

நமது ஆவிக்குரிய தோல்விக்கு நிவாரணம் தூய ஆவி ஒன்றே. நீண்ட காலமாகவே ஆவியானவரை துக்கப் படுத்தி, அணைத்து விலகிப்போனோம். தேவன் தாமே நமக்கு ஒரு புதிய பசி தாகத்தை நீதியின் மேல் ஏற்படுத்தி நாம் நிரம்பி வழிய உதவி செய்வாராக. "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டு மென்பதே தேவனுடைய சித்தமாயிருக் கிறது" *1 தெச.4:3.* "தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்." *1 தெச.4:7.* "சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக; உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" *1 தெச.5:23.* "நீ இந்தக் கற்பனையை மாசில்லாமலும், குற்ற மில்லாமலும் கைக்கொள்" *1 தீமோ.6:13.* "....கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தை விட்டு விலகக் கடவன்" *2 தீமோ.2:19.* "மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மை சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்" *2 கொரி.7:1.*

ஒரு உயரிய, முழுமையான, ஆழமான, அர்ப்பணமுள்ள, வெற்றியின் வாழ்வாகிய ஆவியினால் நிரப்பப்பட்ட வாழ்வுக்கு நாம் அழைக்கப்படுகிறோம். தேவனுடைய ஒரு புதிய சந்திப்பு மிக அவசியம். தேவ பிரசன்னமும் வல்லமை யும் ஆவியானவரின் புதிய அபிஷேகமும் தேவை.

சங்.85:6-ல் குறிப்பிட்டிருப்பது போல, "உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந் திருக்கும்படி, நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ?" எனக் கதறு வோம். "....கர்த்தாவே வருஷங்களின் நடுவிலே உம்முடைய கிரியையை உயிர்ப்பியும், வருஷங்களின் நடுவிலே அதை விளங்கப்பண்ணும்; கோபித்தாலும் இரக்கத்தை நினைத்தருளும்" *ஆப.3:2.*

நமது மிகப்பெரிய தேவை தூய ஆவியின் அதிக வல்லமை அதிக உபவாசம் அதிக ஜெபம் என்பவையாகும்.

"அப்பொழுது விடியற்கால வெளுப்பைப் போல உன் வெளிச்சம் எழும்பி உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்க்கும்" *ஏசா.58:8.* "...... அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து உன் அந்தகாரம் மத்தியானத்தைப் போலாகும். கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்து மாவைத் திருப்தியாக்கி, உன் எலும்பு களை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப் பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பாய்" *ஏசா.58:10,11.* தேவன் தாமே இந்த ஆசீர்வாதங்களை நமக்குத் தந்தருளுவாராக.

# ஆவியின் கனி அன்பு

***The fruit of the spirit is love***

Andrew Murray

நமது எண்ணங்கள் அனுபவங் கள் ஆகியவைகளால் தூய ஆவியான வரைக் குறித்தும் தூய வாழ்வைக் குறித்தும் சோதிக்க அன்பு போதுமானது. நீங்கள் உங்களில் ஆவியானவரை அதிகமாகக் கொண்டிருந்தால் அதிக அன்புள்ளவர்களாகவுமிருப்பீர்கள்.

தூய ஆவியானவர் அன்பின் ஆவியாக வருகிறார். இது சபையில் உண்மையாயிருந்தால் அதன் நிலை வித்தியாசமாயிருக்கும். இந்த எளிய பரம சத்தியத்தை நாம் பிடித்துக்கொள்ள தேவன் உதவி செய்வாராக. தூய ஆவியானவர் வாழ்வை சொந்தமாக்கிக் கொள்ளும்போது இருதயம் உண்மை யாக தெய்வீக அன்பால் நிரம்பிவிடும்.

ஆவியானவர் அன்பாயிருக்கிற தேவனிடமிருந்து வருகிறார். அன்பு தேவனுடைய ஒரு பண்பு என்று சொல்வதைவிட தேவன் அன்பாகவே இருக்கிறார் என்பதுதான் சரி. தூய ஆவியானவர் தேவ ஆவியாக நம்மிடம் வரும்போது அவர் அன்பின் ஆவியாக நம்மைநிரப்புகிறார்.

அன்பு என்றால் என்ன? அதை ஒப்புயர்வற்றதாக்குவது எது? 1 கொரி.13:5-ல் அது தற்பொழிவை நாடாதது என்று வாசிக்கிறோம். அது பிறரைக் குறித்த கரிசனையுடையது. அடுத்தவர்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறது.

தேவன் இந்த அன்பினாலே தமது குமாரனோடு தொடர்பு கொள்ளவும் நாமும் அவருடன் உறவு கொள்ளவும் சித்தம் கொண்டார். தேவன் அன்பா யிருப்பது போல தூய ஆவியானவரும் தேவ அன்பை பகிர்ந்து கொள்ளுகிறவரா யிருக்கிறார்.

தூய ஆவியானவர் தெய்வீகத் தின் மையம். அவர் நம்மில் வரும்போது அன்பின் ஆவியாக வருகிறார்.

தேவன் கிறிஸ்துவுக்கு மட்டு மல்ல கிறிஸ்துவில் உலகத்தை சிருஷ் டித்து அதன்மீது அன்பைப் பொழிகிறார். அனைத்து சிருஷ்டிகளும் இந்த அன்பை பெற்றுக்கொள்கின்றன.

அவர் மனிதர்களையும் தூதர் களையும் தம்மோடு உறவு கொள்ள படைத்தார். அவரது அன்பு அவர்களை முற்றிலுமாக நிரப்புகிறது.

மனிதன் விழுந்தபோது பாவம் தேவ அன்பை இருளாக்கியபோது தேவன் தமது ஒரே குமாரனை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்து இந்த உறவை மறுபடியும் பெற்றுக்கொண்டார்.

இழந்து போன உலகிற்கு தமது குமாரனை ஒரு புதிய வழியில் அனுப்பினார். மாம்சத்தோடு அனுப்பி அவரது அன்பின் வலிமையைக் காண்பித்தார். தமது குமாரனோடு தமது ஜீவனையும், சந்தோஷத்தையும், மகிமை யையும், தூய்மையையும், வல்லமையை யும், ஆசீர்வாதத்தையும் அளித்தார். கிறிஸ்துவில் இவை எல்லாவற்றையும் அளித்தார்.

பாவம் வந்தபோது அது அன்பை அழித்தது. எளிதாக ஆதாம் தனது குற்றத்தை மனைவி மீது செலுத்திவிட் டான். வேகமாகக் காயீன் ஆபேலைக் கொன்றான். உலகம் விரைவில் பொல்லாப்பால் நிறைந்துவிட்டது. அந்த துக்கமான ஆரம்பத்திலிருந்து உலகம் பிரிவினை, குழப்பம், பாவம், அநீதி போன்றவற்றால் நிரம்பியது.

பாவம் செய்த மிகக்கேடான காரியம் அது மக்களை சுயநலமுடைய வர்களாக மாற்றிவிட்டது. சுயநலம் அன்பு கூருவதில்லை. சுயநலம் அன்பு காட்டலாம். ஆனால் அது சந்தோஷப் படுத்தும் ஒருவரிடமே காட்டப்படும். அது உண்மையான அன்பல்ல. உண்மை யான சுயநலமற்ற அன்பு, தகுதியற்றவர் களையும், நேசிக்கக் கூடாதவர்களையும் நேசிக்கும். அந்த அன்பை பாவம் அழித்துவிட்டது.

### தெய்வீக அன்பின் வெளிப்பாடு - இயேசு

இழந்த அன்பைத் திரும்பக் கொண்டுவர இயேசு இவ்வுலகிற்கு வந்தார். அவர் தெய்வீக அன்பின் வெளிப்பாடு. சிலுவைக்குச் செல்லு முன்பு அவரைக் குறித்து ".......தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர் களிடம் அன்பு வைத்தபடியே, முடிவு பரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்" என்று வாசிக்கிறோம் *யோவா.13:1.*

கிறிஸ்து சீஷர்களோடு அன் புடன் வாழ்ந்தார். பனிரெண்டு பேருட னும் அவரது உறவு அன்பாயிருந்தது. அவர்கள் ஒருவரையொருவர் நேசிக்க அவர் விரும்பினார். அவருடைய உலக வாழ்க்கை முடிவுறும் வேளையில் தமது சீடரைப் பார்த்து, "..... நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்ற புதிய கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" என்றார் *யோவா.13:34.*

இக்கட்டளை மற்ற கட்டளை களை விட வேறுபட்டது. ஆனால் இதில் எல்லாம் அடங்கியுள்ளன. இக்கட்டளை புதிதானது. கிறிஸ்து ஒருவரே இதைக் கொடுக்க முடியும். ஏனெனில் அவர் ஒருவரே புதிய அன்பை வெளிப்படுத்தி னார். அதனைத் தமது ஆவியை அளிப்பதால் நமது இருதயங்களில் ஊற்றமுடியும்.

அவர் தூய ஆவியானவரை அனுப்பக்கூடியவர். ஆனபடியால் "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர் களாயிருந்தால், அதினால் நீங்கள்

என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார்" யோவா 13:35.

யோவா 15:12-ல் "நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கட்டளையாயிருக்கிறது" என்றார். மேலும் அவருடைய பிரதான ஆசாரிய ஜெபத்தை யோவா 17:21-23 வசனங்களில் படிக்கலாம்.

உலகம் நாம் ஒருவரையொருவர் நேசிப்பதிலிருந்து கிறிஸ்துவின் மூலம் தேவனை அறிய வேண்டும். கிறிஸ்தவனின் மிகப்பெரிய அடையாளம் அவனில் காணப்படும் அன்பு.

ஆனால் உலகமும், திருச்சபையும் இதை சிறிதளவுதான் புரிந்து கொண்டுள்ளது. தனது இருதயத்தை ஆண்டவரில் நிலைப்படுத்த ஒவ்வொரு விசுவாசிக்கும் அன்பு முக்கியமானது என்பதை பிரசங்கத்தின் மூலமாகவும் செயல்முறையிலும் எவ்வளவு குறைவாக அறிவிக்கிறோம்! "என் இருதயத்தை அன்பால் நிரப்பும்" என்று விசுவாசிகளாகிய நாம் ஜெபிக்கிறோமா! நான் எப்படி அன்பால் நிரப்பப்படமுடியும்!

அன்பை இவ்வுலகிற்கு மறுபடியும் கொண்டுவர இயேசு இவ்வுலகிற்கு வந்தார். கல்வாரியில் இதனை அவர் நிறைவேற்றினார். அவரது மரணம் வெற்றியும் அன்பின் வெளிப்பாடுமாயிருக்கிறது. இப்போது நாம் அன்பில் நடக்கவும் வாசம் பண்ணவும் அழைக்கப்படுகிறோம். நம்மை வெறுக்கிறவர்களையும் நாம் நேசிக்க அழைக்கப்படுகிறோம்.

உண்மையான அன்பை இவ்வுலகிலோ, பரத்திலோ எதுவும் மேற்கொள்ள முடியாது. அதிக வெறுப்பு இருக்குமிடத்தில் அதிக அன்பு வெளிப்பட்டு வெற்றிபெற்று அதன் இயற்கை தன்மையைக் காண்பிக்கிறது. இவ்விதமாகவே அன்பைப் பயிற்சிக்கக் கிறிஸ்து தமது சீஷர்களுக்குக் கட்டளையிட்டார்.

"அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினால் அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக் கிறோம்" 1 யோவா.3:16. இதை நாம் புரிந்து கொண்டோமா?

அடிக்கடி சீஷர்களுக்குள்ளே யார் பெரியவன் என்ற விவாதம் உண்டாயிற்று. அவரது ராஜ்யத்தில் யாருக்கு முதலிடம் கிடைக்கும் என்ற எண்ணத்துடனிருந்தனர்.

அன்புத்தாட்சியினிமித்தம் அவர்களில் பெருமை ஏற்பட்டது. அன்பு தாழ்மையுடையது. "நான் பிறருக்கு எப்போதும் ஆசீர்வாதமாயிருக்க வேண்டும்" என்பது அன்பின் ஆவல். அது சுயநலத்துடன் இருக்காது. இயேசுவைப் போன்ற அன்பு நம்மில் வேண்டும். தூய ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளுமட்டும் சீஷர்கள் இத்தகைய உயரிய பண்பற்றவர்களாகவே காணப்பட்டனர்.

## தூய ஆவியானவர் பரலோக அன்பினை மனிதனுக்குத் தருகிறார்

இயேசுக் கிறிஸ்து தமது அன்பை வெளிப்படுத்த உலகிற்கு வந்து மீட்பின் அன்பின் செயலை முடித்தபின்பு தூய ஆவியானவர் பரத்திலிருந்து அவரது அன்பை நமது உள்ளங்களில் கொடுத்தார்.

பெந்தெகொஸ்தே நாளில் இயேசுவின் அன்பும், ஜீவனும் அவரது சீஷர்களின் இருதயங்களில் ஊற்றப்பட்டன. எனவேதான் பேதுரு தைரியமாக அவருடைய ஆவியால் பேசினான்.

சீஷர்கள் ஒருவரையொருவர் நேசிப்பதோடு எதிரிகளையும் நேசிக்கக் கற்றுக்கொண்டனர். பெந்தெகொஸ்தே நாளுக்குப்பின் அவர்களில் தைரியம் ஏற்படக் காரணம் கிறிஸ்துவின் அன்பு அவர்களை ஆட்கொண்டு பயத்தை மேற்கொள்ளச் செய்ததுதான்.

அது மட்டுமல்ல மாற்றம், அப்.2,4 அதிகாரங்களில் விசுவாசிகள் ஒருமனப்பட்டிருந்தார்கள் எனப் படிக்கிறோம். மூன்று வருடங்கள் ஆண்டவரோடு நடந்தபோதுகூட அவர்களில் ஒருமனம் இல்லாதிருந்தது.

அவர்களில் ஒருமனதைக் கொண்டு வந்த தூய ஆவியானவர் நம்மையும் நிரப்ப வேண்டும். கிறிஸ்துவைப் போல ஒரு தூதனுடைய நாவினால் அன்பைக் குறித்து 3 வருடங்கள் பிரசங்கித்தாலும், ஆவியானவர் ஒருவரில் பரலோக அன்பைக் கொண்டு வராவிட்டால் அவர்கள் போதிக்கப்படமாட்டார்கள்.

நாம் தூய ஆவியானவருக்காகக் காத்திருந்து நம்மை அவருக்கு முற்றிலுமாக அர்ப்பணிக்க வேண்டும். "ஆவியின் கனியோ அன்பு........".

## எல்லாக் கிருபைகளுக்கும் மகுடமான அன்பு

நமது அனுதின வாழ்விலும் நடத்தையிலும் ஆவியின் கனியாகிய அன்பு வெளிப்பட வேண்டும். அன்பிலிருந்து தான் அனைத்து கிருபைகளும் நன்மைகளுமாகிய சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், சாந்தம், இச்சையடக்கம் ஆகியவை உண்டாகின்றன. அன்பிருந்தால் உங்கள் வார்த்தைகளில் கடினம் இராது. இரக்கமின்மை, சுயநலம் ஆகியவை பிறருக்கு பதில் சொல்லும்போது வெளிப்படாது. பதிலாக மனிதருக்கு முன்பாகவும், தேவனுக்கு முன்பாகவும் சாந்தம் வெளிப்படும்.

சாந்தமான குணங்களை கொலோ.3:12-ல் படித்துப் பாருங்கள். ஒரு மனிதனுடைய நற்பண்புகள் உற்சாகம், தைரியம், ஜாக்கிரதை என்று நாம் எண்ணலாம். ஆனால் தூய ஆவியானவரை சார்ந்து கொள்ளும்போது சாதுவான குணங்கள் ஏற்படுகின்றன.

இவை பரலோக கிருபைகள். புறஜாதிகளின் தேசத்தில் இவைகளைக் காண்பதரிது. கிறிஸ்து பரலோகத்திலிருந்து இறங்கி வந்து இதனைப் போதிக்க வேண்டியதாயிருந்தது. ஆயினும் அனைத்து நற்பண்புகளிலும் மேலானது அன்பு.

எனவே இந்த அன்பைப் பற்றிக்கொள்ள நாம் வாஞ்சிக்க வேண்டும். தூய ஆவியானவரைப் பெற்றுக் கொள்ள நம்மையும், சுயத்தையும் விட்டுக்கொடுத்துவிட்டு அன்பின் வாழ்வு வாழ வேண்டும்.

சபைகளிலுள்ள பிரிவினைகளைப் பாருங்கள். நாம் ஒன்றாயிருக்க வேண்டும் என்று கூறப்பட்ட விலையுயர்ந்த சத்தியம் கைக்கொள்ளப்படவில்லை. மாறாகப் பிரிவினைகளை ஏற்படுத்துகிறது.

நாம் சத்தியத்திற்கு உற்சாகமுள்ளவர்களாயிருக்கிறோம் என்று சொல்லியும் சத்தியத்தை அன்போடு கூற வேண்டும் என்பதை மறந்துவிடுகிறோம். மிஷன் நிலையங்களிலும் கூட இப்படிப்பட்ட பிரிவினைகளும் குளிர்ந்த நிலையும் காணப்படுகிறது. வித்தியாசமான மனநிலைகள், அபிப்பிராயங்கள் போன்றவற்றால் கோபம், பொறாமை போன்றவைகள் எழும்பி, அன்பு தணிந்து போகிறதே. ஆண்டவருக்காக எல்லாவற்றையும் அர்ப்பணித்த மக்கள் அன்பின் இரகசியத்தை அறியாதது மிகவும் துக்கமானது.

குடும்பங்கள் சபைக் குழுக்கள் மிஷன் கூடுகைகள் போன்றவற்றிலும் அன்பு காணப்படவில்லையே. ஏனெனில் நாம் இன்னும் அன்புகூர கற்றுக் கொள்ளவில்லை. ஆவியின் முதற் கனியாகிய அன்பிற்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை.

அன்பே முதன்மையாயிருக்கும் வாழ்வில் நீங்கள் வளர்ந்தால் எந்த சூழலிலும், "தேவ உதவியால் நான் நேசித்தே ஆகவேண்டும்" என்று சொல்லப்பழக வேண்டும்.

தேவ வசனமாகிய கண்ணாடிக்கு முன் நமது வாழ்வைக் கொண்டு வருவோம். பின்பு தேவனே எனது சபையை ஆவியால் நிரப்பும் என்று அடிக்கடி ஜெபித்த நான் அன்பின் ஆவியால் நிரப்பப்பட்டிருக்கிறேனா? என ஜெபிப்போம்.

## தேவனுக்கு எதிரான நமது அன்பை நமது சகோதரனை நேசிப்பதின் மூலம் நிரூபிப்போம்

"தேவனை ஒருவரும் ஒரு போதும் கண்டதில்லை. நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்" 1 யோவா.4:12. நான் தேவனைக் காணமுடியாது. ஆனால் பதிலாக என் சகோதரனைக் காணமுடியும். அவனை நான் நேசித்தால் தேவன் எனக்குள் வாசம் பண்ணுகிறார். சகோதரனை நேசிப்பது தேவனோடுள்ள உறவுக்கு ஒரு வழி.

1 யோ.4:20-ல் “தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன், தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்”

நேசிக்க முடியாத ஒரு சகோதரன் இருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். உங்களைக் காணும்போதெல்லாம் உங்களை அவன் வேதனைப்படுத்தலாம். நீ நல்ல கடின உழைப்பாளியாக இருக்கலாம். ஆனால் அவன் சுறுசுறுப்பற்றவன். எனவே “அவனை நேசிக்க முடியாது” என்கிறீர்களா?

அப்படியானால் கிறிஸ்து போதித்த சிறந்த பாடத்தை இன்னும் நீங்கள் கற்றுக்கொள்ளவில்லை. அவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் அவனை நேசிக்க வேண்டும். ஏனெனில் அன்பு எல்லா வேளைகளிலும் ஆவியின் கனியாயிருக்கிறது.

நீங்கள் தேவனை நேசிப்பதாக அழகிய எண்ணங்கள் கொண்டிருக்கலாம். ஆனால் அதை நிரூபிக்க உங்கள் சகோதரனை நேசிக்க வேண்டும். அந்த அந்தஸ்தின்படிதான் தேவன் உங்கள் அன்பை அளக்க முடியும்.

நீங்கள் ஆவியால் நிரப்பப்பட விரும்பினால் உங்கள் சித்தத்தை அவர் ஆட்கொள்ளுவது மட்டுமல்ல, உங்கள் இருதயமும் வாழ்வும் அவரது ஆவியால் நிரப்பப்பட ஒப்புவிக்க வேண்டும்

தூய ஆவியானவர் மட்டுமே இதைச் செய்ய முடியும். “ஆவியினால் நிரம்பியிருங்கள்” என்பதும் “ஆவியின் கனி அன்பு” என்பதும் பிரிக்க முடியாதவை.

ஆப்பிள் மரக் கனியைப் புசிக்க விரும்புகிறவன் அந்த மரத்தை நட வேண்டும். அதுபோல் உங்கள் இருதயத்தில் அன்பு வேண்டுமானால் ஆவியானவர் வேண்டும்.

எப்படி தேவ அன்பால் நிரப்பப்படுவது? தாழ்மையோடு நமது அன்புத் தாழ்ச்சியை அறிக்கையிட வேண்டும். அன்பு வேண்டும் என்ற ஆவலே இல்லாமலிருந்ததை அறிக்கையிட வேண்டும்.

பெருமை, சுயநலம் இவற்றோடு தேவ ஆவியின் வல்லமைக்காக ஜெபிப்பது தவறு. அவர் தமது அன்பு, தாழ்மை, பொறுமை, சாந்தகுணம் ஆகியவற்றால் உங்களை நிரப்பும்படி முதலாவது கேட்க வேண்டும்.

அப்படி அறிக்கையிடும்போது கிறிஸ்து உங்களை சுயநலம், பெருமை, அன்பின்மை ஆகியவற்றிலிருந்து கழுகி சுத்தப்படுத்துவார். ஒவ்வொரு நாளும் ஆவியால் நிரப்பப்படும்படி நாடுங்கள். அப்போது சேவை செய்வதற்கான ஆவியின் வல்லமையைப் பெறுவீர்கள்.

**முக்கிய அறிவிப்பு**

**வங்கி வழியாக காணிக்கை அனுப்பினால் தயவுசெய்து உடனே எங்களுக்கு தெரிவியுங்கள். இது நீங்கள் எங்களுக்கு செய்யும் பெரிய உதவியாகும்.**

# ஆவியில் ஜெபிப்பது

***Praying in the Spirit***

R.A. Torrey

ஜெபத்தில் நாம் தூய ஆவியானவரை சார்ந்திருப்பதைக் குறித்து எபே.6:18-ல் “எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும், விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி......” என்றும் யூதா.20-ல் “.... பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி.....” என்றும் படிக்கிறோம். முழுமையான ஜெப இரகசியம் ‘ஆவியில்’ என்ற பதத்தில் அடங்கியுள்ளது. தூய ஆவியானவராகிய தேவனது தூண்டுதலால் பிதாவாகிய தேவன் பதிலளிக்கிறார்.

இயேசுவின் சீடர்கள் அவரிடம் வந்து, ஆண்டவரே ஜெபிக்கக் கற்றுத் தாரும் என்று கேட்டனர். எப்படி ஜெபிக்க வேண்டுமென நாமும் அறியாதிருக்கிறோம். நமக்கு அருகில் உதவி செய்யும் ஒரு போதகர் இருக்கிறார். யோவா14:16-17. மேலும் “அந்தப்படியே, ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார்” ரோமர்.8:26. ஆவியானவர் எப்படி ஜெபிக்கவேண்டுமென போதிக்கிறார்.

நாம் தேவ சமூகத்தில் வரும்போது “நமது பலவீனங்களை” நாம் அறிய வேண்டும். நமது அறிவீனம் எதற்காக ஜெபிக்க வேண்டும்? எப்படி ஜெபிக்க வேண்டும்? என்பவைகளை நாம் அறியாதபடியால் தூய ஆவியானவரை நோக்கிப் பார்க்க வேண்டும். அவர் நம்மை நடத்தும்படியாகவும் வார்த்தைகளை ஏறெடுக்கும்படியாகவும் ஜெபிக்க வேண்டும்.

தேவ சன்னிதானத்தில் அவசரமாக வந்து எச்சரிக்கையின்றி நம் மனதில் தோன்றுவதைக் கொட்டுவது புத்தியீனமான ஜெபம். முதலாவது அவரது சமூகத்தில் அமைதியாயிருக்க வேண்டும். ஆவியானவரை அனுப்பி நம்மைப் போதிக்கும்படி ஜெபிக்க வேண்டும். ஆவியானவருக்காகக் காத்திருந்து நம்மை அவருக்கு ஒப்புவித்து விட்டு பின்பு ஜெபிக்க வேண்டும்.

### ஜெபிக்கத் தோன்றாதபோது ஜெபிக்க வேண்டும்

சில வேளைகளில் தேவ சமூகத்தில் வரும்போது ஜெபிக்கத் தோன்றுவதில்லை. ஜெபிக்காமல் இருந்துவிடாதீர்கள். ஜெபிக்கத் தோன்றாமலிருக்கும் வேளைதான் நாம் ஜெபிக்க மிக அவசியமான நேரம். தேவனுக்கு முன்பாக அமைதியாயிருந்து நமது இருதயம் குளிர்ந்து ஜெபத்தாழ்ச்சியுடனிருப்பதை உணர்ந்து அவரை நோக்கிப் பார்த்து விசுவாசத்துடனே அவர் தூய ஆவியானவரை அனுப்பி நமது இருதயத்தில் அனல் உண்டுபண்ணி அதனை ஜெபிக்கத் தூண்டும்படி கேட்க வேண்டும். சிறிது நேரத்தில் ஆவியானவரின் பிரசன்னத்தின் அனல் ஏற்பட்டு நாம் சுயாதீனமாக, ஆவலோடும் வல்லமையோடும் ஜெபிக்க ஆரம்பிப்போம். இது அனேக சபைகளின் அனுபவம் மட்டுமல்ல, என்னுடைய அனுபவமுமாகும்.

நாம் ஆவியில் ஜெபிக்கும்போது நாம் சரியான காரியங்களுக்காக, சரியான விதத்தில் ஜெபிப்போம். நமது ஜெபத்தில் சந்தோஷமும் வல்லமையுமிருக்கும்.

### விசுவாசத்தோடு ஜெபம்

வல்லமையான ஜெபத்திற்கு விசுவாசம் வேண்டும். மாற்.11:24-ல் “..... எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்கிறார் இயேசு. எந்த வாக்குத்தத்தமானாலும் அது நிறைவேறும் என்ற விசுவாசம் வேண்டும். “உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் யாக்.1:5.

நேர்மறையான இந்த வாக்குத்தத்தத்திற்கு அடுத்த வசனம், “ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான், அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக என்று கூறுகிறது. அசையாத நம்பிக்கை அவசியம்.

எதிர்பார்ப்புக்கு மேலான ஒரு விசுவாசமுமுண்டு. அது ஜெபம் கேட்கப்பட்டுவிட்டது, வாக்குத்தத்தம் நிறைவேறிவிட்டது என்ற உணர்வுடையதாகும்.

### உண்மையான விசுவாசத்தைப் பெறுவது எப்படி?

சிலர் தங்கள் சித்தத்தின்படி முயற்சித்து விசுவாசத்தை உருவாக்கி அவர்கள் எதிர்பார்த்த பதில் கிடையாதபடியால் அவர்களது விசுவாசத்தின் அஸ்திபாரம் கலைந்துபோகிறது.

ரோமர் 10:17-ன் படி ‘விசுவாசம் கேள்வியினால் வரும். கேள்வி தேவனுடைய வார்த்தையினால் வரும்’ என்று படிக்கிறோம். பவுல் எழுதும் போது : மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள் ரோமர்.8:14.

எனவே வேதவசனங்கள் தேவ பிள்ளைகள் தேவ ஆவியால் நடத்தப்படுவார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

"பாதை காட்டும் மா யெகோவா
பரதேசியான நான் இப்பாழ்நிலத்தில்
பலவீனன், ஆனால் நீர் வல்லவர்
உமது பலத்த கரத்தால் என்னைப்
பிடித்துக்கொள்ளும்"

### தேவன் எப்படி நம்மை வழிநடத்துவார்?

"நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்" 2 கொரி.5:7. "....விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்" ரோ.1:17. தூய ஆவியானவரின் வழிநடத்துதல் நமது விசுவாசத்தின் பயிற்சியை சார்ந்தது. விசுவாசத்தை நாம் விட்டுவிடும் அளவில் தேவன் நம்மை நடத்துவதில்லை.

நோவா தேவனை விசுவாசித்து பேழையைக் கட்டினான். தான் காண்பிக்கும் தேசத்துக்குப் போகும்படி தேவன் ஆபிரகாமுக்குக் கட்டளையிட்ட போது விசுவாசத்தினாலே அவன் சென்றான். எபி.11:7-8.

நாம் விசுவாசித்தால் நிச்சயமாக நடத்தப்படுவோம். இல்லாவிட்டால் நாம் கைவிடப்படுவோம். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் எபி.11:6. அவர் நடத்துமிடமெல்லாம் நாம் செல்ல வேண்டும்.

"சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி....." சங்.25:9. ஆவியானவர் நாம் நியாயத்திலே நடக்கச் செய்கிறார். அவர் நமது புரிந்துகொள்ளுதலை பிரகாசப்படுத்தி நமது நியாயத்தை நல்ல உணர்வுக்கு நேராக நடத்துகிறார்.

தேவன் தமக்கு எந்த செயலிலும் காரணத்தை அவருடைய உள்ளத்தில் கொடுத்ததாக ஜாண் வெஸ்லி கூறுகிறார்.

"உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி....." என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார். சங்.73:24. "நான் உனக்குப் போதித்து நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்" சங்.32:8. ஆலோசனை, போதனை, உபதேசம் யாவும் போதிக்கிறவர்களிடமிருந்து மட்டும் வருவதில்லை. போதிக்கப்படுகிறவர்கள் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

தூய ஆவியானவர் நம்மை வழிநடத்த நாம் கவனமாக கவனிக்கவும், கருத்தோடு படிக்கவும், பொறுமையோடு கற்றுக்கொள்ளவும் வேண்டும். தூய ஆவியானவர் போதிக்கும்போது, நமது திறமைகளையும் வலிமைகளையும் அப்புறப்படுத்துவதில்லை. ஆனால் அவை முழுமையாக செயல்படச் செய்து பரிபூரணமடையச் செய்கிறார். இவ்வாறு அவை நம்மை வழிநடத்தி தாக்கம் ஏற்படுத்தும் வாய்க்கால்களாக பயன்படுத்தப்படுகின்றன.

சூரியன் நாம் அனைவரையும் பிரகாசிப்பிப்பது போல நமது ஆவிக்குரிய வாழ்வை பிரகாசிப்பித்து ஒருமனமுடையவர்களாக்கி தேவனோடு இணைக்கிறார். நாம் ஆவிக்குரிய தூண்டுதல் பெற்று தேவனுடைய சிந்தையை அறிகிறவர்களாகவும், அவருடைய சித்தத்தை சந்தேகிக்காதவர்களாகவுமிருப்போம்.

### தூய ஆவியானவர் நம்மை வழிநடத்துகிற விதங்கள்

1. நமது உள்ளங்களில் ஆழமான வேத சத்தியங்களையும் குறிப்பாக ஆவியானவர், அப்போஸ்தலர் ஆகியவர்களைக் குறித்தும் வெளிப்படுத்தி அவர்களது அடிச்சுவடுகளைப் பின்பற்ற வழிநடத்துகிறார். அவர்களது விசுவாசம், அன்பு, சுயநலமற்ற பயபக்தி போன்ற பண்புகளையும், ஜீவனையே அர்ப்பணிக்கும் தியாகத்தையும் பின்பற்ற வேண்டும்.
2. அனுதின வாழ்வில் சூழ்நிலைகள் வாய்ப்புகள் மூலமாக.
3. பிறருடைய ஆலோசனைகள் மூலமாக - குறிப்பாக, தேவபயமும் ஞானமுமுள்ள அனுபவமுள்ள தேவபிள்ளைகள் மூலமாக.
4. ஜெபத்திலும், ஆயத்தத்திலும் நாம் காத்திருக்கத்தக்கதாக பாவ உணர்வு அதிகரிக்கிறது. இந்த தெய்வீக உணர்வினால் மக்கள் பிரசங்கிக்க அழைக்கப்படவும், வெளிநாடுகளுக்கு மிஷனெறிகளாகச் செல்லவும், தங்கள் காலம், தாலந்து, பொருள், ஜீவன் ஆகியவற்றைத் தேவ பணிக்காகவும், ஆத்துமாக்களுக்காகவும் செலவிட தூண்டப்படுகின்றனர்.

### ஏன் சிலருக்கு வழிநடத்துதல் கிடைக்கவில்லை

1. அவர்கள் ஜாக்கிரதையோடு தேவ வசனத்தைத் தேடி அதன் சத்தியங்களாலும் நியமங்களாலும் நிரப்பப்படவில்லை. தங்கள் மனதையும் இருதயத்தையும் கிறிஸ்துவின் பள்ளியில் கற்றுக்கொள்ள அனுமதிக்க அசதியாயிருக்கிறார்கள்.
2. அவர்கள் தங்கள் சூழ்நிலைகள், நிலைமைகள் யாவும் தேவனது திட்டம் என்றும் அதன் மூலம் பெரிய காரியங்களுக்காக தேவன் பயன்படுத்துவார் என்றும் ஜாக்கிரதையுள்ள திராட்சைத் தோட்ட பணியாளர்களாக்குவார் என்றும் தாழ்மையுடன் ஏற்றுக் கொள்வதில்லை.

ஒரு இளம்பெண் தன்னை ஆத்தும ஆதாயத்திற்காக அர்ப்பணிக்க அழைப்புப் பெற்றதாக எண்ணினாள். ஆனால் பயிற்சி அளிக்கப்பட்டபோது அவளில் சுயநலம் கண்டுபிடிக்கப்பட்டது. தான் வீட்டிற்குச் சென்று தூய வாழ்வு வாழ்ந்து குடும்பத்தினரை இரட்சிப்புக்கு வழிநடத்தப்போவதாகவும் கூறினாள். நாம் இல்லத்தில் உண்மையற்றவர்களாக இருந்தால் அல்லது நமது பணியில் உண்மையற்றிருந்தால் தேவன் நம்மை நடத்தும் வழியைத் தவறவிடுகிறோம்.

3. பிற கிறிஸ்தவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள விருப்பமற்றிருக்கிறார்கள். தாழ்மை மனது அவர்களுக்கில்லை.
4. அவர்கள் தேவனுக்குக் காத்திருந்து, கவனித்து தூய ஆவியானவரின் நடத்துதலை கவனிப்பதில்லை. சுயசித்தமுள்ளவர்களாக தங்கள் வழியில் செல்ல விரும்புகிறார்கள். "நாம் தேவனிடம் கேட்பது அவரது சித்தமும் வழியுமல்ல, ஆனால் நமது வழியை அவர் ஆமோதிக்க வேண்டும் என்பதாகும்" என்று ஒருவர் கூறியிருக்கிறார். மேலும் இன்னொருவர், நாம் உண்மையாயிருந்தால் தேவனுடைய நடத்துதல் தெளிவானது என்று கூறியுள்ளார்.

நாம் சந்தோஷமாக கீழ்ப்படிந்தால் பாதை தவறமாட்டோம். "அந்த பரம தரிசனத்திற்கு நான் கீழ்ப்படியாமலிருக்கவில்லை" அப்.26:19 என்று பவுல் குறிப்பிட்டார். எல்லா நிலையிலும் அவர் தேவனுக்குக் கீழ்ப்படிந்தபடியால் தூய ஆவியானவர் அவரை வழிநடத்த முடிந்தது.

5. **பயத்தினாலும் அவிசுவாசத்தினாலும்:-**

மோசேயும் யோசுவாவும் தேவன் வாக்குத்தத்த நாட்டை அவர்களுக்கு அளிப்பார் என்று உறுதி கூறியும் பயமும், அவிசுவாசமும் இஸ்ரவேல் கானானில் பிரவேசிக்கத் தடையாயிருந்தது. தேவனை நோக்காமல் அரக்கர்களையும் அரணான பட்டணங்களையும் நோக்கினார்கள். இவ்வாறு தேவ வழியிலிருந்து விலகி வனாந்தரத்தில் மடிந்தார்கள்.

6. எல்லாக் காரியங்களையும் தேவனுடன் நம்பிக்கையுடனும் ஜெபத்துடனும் செய்யவில்லை.

ரோமர் 12:12-ல் பவுல் 'ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்' என்கிறார். வேகக்குறைவு, தாமதம், மந்தநிலை, தூக்கமயக்கம் இவை ஜெபத்தில் காணப்பட்டால் தேவ பிள்ளைகள் தேவனுடைய நடத்துதலின் உறுதியை இழந்து போவார்கள்.

7. **பொறுமையின்மையும் அதிக வேகமும்:-**

தேவனுடைய சில திட்டங்கள் மெதுவாக வெளிப்படலாம். நாம் பொறுமையோடு அமைதியாகக் காத்திருக்க வேண்டும். விசுவாசத்தோடும் உத்தமத்தோடும் காத்திருந்தால் ஏற்ற காலத்தில் அவர் தமது வழியை நமக்குத் தெளிவுபடுத்துவார். நாம் துரிதப்படுவதை அவர் விரும்பவில்லை. மேகஸ்தம்பமும் அக்கினி ஸ்தம்பமும் கிளம்பும் வரை பொறுமை வேண்டும். அன்போடு கூடிய உறுதியுடன் நமது கூடாரங்களைப் பெயர்த்து அவர் காட்டும் பாதையில் முன்னேறலாம்.

வேதத்தில் கூறப்பட்டிருப்பதற்கு எதிராக அல்லது தவறான பாதையில் தூய ஆவியானவர் நம்மை நடத்துவதில்லை. அவர் நாம் இணக்கமுள்ளவர்களா

# சபை முழங்கால்களில் நிற்க வேண்டும்

## *The Church should be on its knees*

A.M. Hills

உலக அளவில் நேர்மையற்ற சூழ்நிலையில், மனச்சாட்சி இன்றி சட்டங்கள் மீறப்பட்ட காலக்கட்டத்தில் தான் கிறிஸ்துவின் சபை பிறந்தது.

ஆதி நாட்களில் சீஷர்கள் பொருளற்றவர்களாகவும் சமுதாயத்தில் மதிப்பற்றவர்களாகவும் நிறுவனங்களின் உதவி பெறாதவர்களாகவுமிருந்தனர். ஒதுக்கப்பட்டவர்களும், பெலவீனரும், அந்தஸ்து இல்லாதவர்களும், திறமையற்றவர்களும் கல்வியற்றவர்களுமாயிருந்தனர். அவர்களிடம் புதிய ஏற்பாடோ, அல்லது பழைய ஏற்பாடோ இல்லை. எந்த ஒரு கிறிஸ்தவ பத்திரிகையோ அல்லது கூடி ஆராதிக்கும் இடமோ அவர்களுக்கில்லை.

அதிகாரங்கள் பொதுவான அபிப்பிராயங்கள் யாவும் அவர்களுக்கெதிராகவே இருந்தன. அவர்கள் நிந்திக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டு நாடுகடத்தப்படவும் மரண ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படவும் செய்தனர்.

அன்றைய ஆதி கிறிஸ்தவர்களுக்கு அவர்களுக்குள்ளே வாசம் செய்த இரட்சகர் மற்றும் தூய ஆவியானவரது ஒத்தாசை இருந்தது. எனவே எதிரியான உலகத்தையும் சகல அந்தகார சக்திகளையும் அவர்கள் மேற்கொண்டார்கள்.

ஏழு ஆண்டுகளுக்குள் இயேசுவைப் பின்பற்றும் அரை மில்லியன் மக்கள் எழும்பினர். பாபிலோனில் மட்டுமே கால் மில்லியன் கிறிஸ்தவர்கள் வாழ்ந்ததாக அதிகாரபூர்வமாக கூறப்படுகிறது. தூய ஆவியானவரின் அபிஷேகத்தால் சில வருடங்களுக்குள் அவர்கள் கோடிக்கணக்காகப் பெருகிவிட்டனர்.

இன்றைய சபைகளும் ஊழியங்களும் இவ்வாறு ஆவியால் நிரப்பப்பட்டால் பத்து ஆண்டுகளுக்குள் உலகத்தைக் கிறிஸ்துவுக்காக ஆதாயம் பண்ண முடியும்.

தூய ஆவியானவரின் வல்லமையைத் தவிர வேறு யாவும் இன்று கிறிஸ்தவ பணிகளில் காணப்படுகிறது. எனவேதான் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப் போல வெற்றி பெற முடியாமல் பெலவீனமாக காணப்படுகிறோம்.

“நம்மில் தேவ ஆவியானவர் இல்லாவிடில் ஆலயங்களை அடைத்து, கதவுகளை இறுகப்பூட்டி அவைகளில் கறுப்பு சிலுவை சின்னத்தை வைத்து, ‘தேவனே எங்கள் மேல் இரக்கமாயிரும்’ என்று சொல்வது நலம்” என்று சார்லஸ் ஸ்பர்ஜன் கூறியிருக்கிறார். “ஊழியக்காரரே, தேவ ஆவியானவர் உங்களில் இல்லாவிட்டால் நீங்கள் பிரசங்கியாதிருப்பது நலம். வீட்டிலே தங்கியிருங்கள். தேவ ஆவியானவர் இல்லாத சபை ஆசீர்வாதத்திற்குப் பதிலாக சாபம் நிறைந்திருக்கும் என்று கண்டிப்பாகக் கூறுவேன்.”

*லூக்.3:21-22* வசனங்களில் இயேசு தமது ஊழியத்தை ஆரம்பிக்குமுன் தூய ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டார் என்று படிக்கிறோம். நாமோ துணிந்து அபிஷேகமில்லாமலேயே ஊழியம் செய்கிறோம் என்று விசனப்படுகிறார் S.A. கீன் என்ற ஊழியக்காரன். தமது சீஷர்களும் தனது கட்டளைக்குப் பின்பு அபிஷேகமின்றி ஊழியத்தைச் செய்யக்கூடாது என்பதற்காக “...... நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்” லூக்.24:49. ஆனாலும் கூட எத்தனை ஊழியக்காரர்கள், போதகர்கள், மிஷனெறிகள், சுவிசேஷகர்கள் மற்றும் பிற பணியாளர்கள் இந்த வல்லமையின்றி களத்திலிருக்கிறார்கள்!

இன்றைய சபையின் மிகப் பெரிய தவறு, அங்கு அனேகர் தேவ பணி செய்யவும், ஆத்தும ஆதாயம் செய்யவும் தூய ஆவியானவரின் அபிஷேகமின்றி முன்வருகிறார்கள். எனவேதான் அதிகமாகக் கொடுத்தும், செய்தும், சென்றும் கனியுமில்லை, இரட்சிக்கப்படுகிறவர்களின் எண்ணிக்கையுமில்லை.

சபை ஒரு புதிய தீர்மானத்தில் வரவேண்டும். அது முழங்காலூன்றி, பரலோகத்தை நோக்கிப் பார்த்து தூய ஆவியானவரை பெற்றுக்கொள்வது அவசியம்.

சபைகளின் நடுவிலும், கிறிஸ்தவர்கள் மத்தியிலும், தேவ ஜனங்களிலும், பரவலாக எங்குமே இந்த ஆவியின் தனிப்பட்ட அபிஷேகம் தேவையாயிருக்கிறது. அதுவே சமுதாயத்தில் பரிசுத்தத்தையும் வல்லமையையும் கொண்டுவரும்.

உண்மையாகவே சபைகள், ஸ்தாபனங்கள், இயந்திர மயமாகவும், கலாச்சார அடிப்படையிலுமிராமல் ஆவியால் நிரப்பப்படுவது இன்றியமையாதது.

சபை முழங்காலூன்றி தன்னைத் தாழ்த்தி தேவன் இரங்கி தூய ஆவியின் அபிஷேகத்தை அளிக்கும்படி ஜெபிக்க வேண்டும்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யிருக்கும்படி கூறுகிறார். *1 பேது.3:8.* இது தேவ கட்டளை. சிறிய கிருபை களாகிய, உருக்கம், இரக்கம் போன்றவை களோடு பெரிய சட்டங்களாகிய தூய்மை, நீதி ஆகியவையும் நம்மில் காணப்பட வேண்டும்.

நமக்கு கடினமான பாதையில் சிலவேளை அவர் நம்மை நடத்தலாம். துன்பமும், இழப்பும் நேரிடலாம். இயேசு வனாந்தரத்தில் சாத்தானால் அதிகமாக சோதிக்கப்பட்டாரே. பிலாத்துவினால் நியாயம் விசாரிக்கப்பட்டு சிலுவைக்குச் சென்றாரே.

பவுலின் வாழ்க்கையில் சிறை, கல்லெறிதல், அடிகள், பசி, குளிர், பயங்கர பாடுகள், மரணம் ஆகியவை அனுமதிக்கப்பட்டன. ஆனால் அவர் *2 கொரி.12:9-10* வசனங்களில் கூறுவதைப் பாருங்கள். “..... ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன். அந்தப்படி ..... கிறிஸ்துவினிமித்தம் வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்”. நமது பரம தகப்பனின் நடத்துதல்!


**ஜுன் மாத உபவாச ஜெபம்**

Heart cry for Holy Spirit Revival

**எழுப்புதலுக்காக இதய கதறல் 2018**

(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : **09.06.2018**
2-வது சனிக்கிழமை

சமயம் : காலை 09.00 மணி முதல்
மாலை 04.00 மணி வரை

இடம் : **ICRM Central Church**
Medak block,
New Bamboo Bazar, Mysore

தொடர்பு : Pastor **Mohandoss**
மொபைல் : 98 45 94 56 80


# விசுவாசத்தின் சோதனையில் துதி

## *Praise in Trial of faith*

Carrie Judd Montgomery

உன் விசுவாசத்தின்படி உனக்கு ஆகக்கடவது என்பது தேவனுடைய வார்த்தை மத். 9:29. தேவன் நமது விசுவாசத்தின்படி கிரியை செய்கிறார். நமது விசுவாசம் முதிர்ச்சியடைய பதில் தாமதிப்பதுமுண்டு. அவர் என்னை சோதித்த பின்பு பொன்னாக விளங்குவேன். யோபு. 23:10 அவரில் நாம் ஆசீர்வதிக்கப்பட அக்கினியால் புடமிடுகிறார். “நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும்........” வெளி.3:18 அவர் அளிக்கிறார்.

கடினமான அனுபவங்களில் ஆண்டவரைத் துதிப்பது கூடாமலிருக்கிறது. அவை கடினமாயிரா விட்டால் உங்கள் விசுவாசத்தை அவை பரிசோதிக்க முடியாது. ஆனால் அவருடைய பலத்த கரத்துக்குள் நீங்கள் சென்று அவரைத் துதிக்க ஆரம்பித்தால் சோதனைகள் மத்தியில் உங்களை மேற்கொள்ளச் செய்வார்.

(2–ம் பக்கத் தொடர்ச்சி)

உங்கள் ஜெபங்கள் அதிகம் தேவை.

1. கர்த்தருக்குச் சித்தமான இடம் ஒழுங்கு செய்யப்பட
2. பிற சபை ஊழியர்களின் ஒத்துழைப் பிற்காக
3. பிரயாண வசதிக்காக
4. முன்கூட்டியே அதற்கான விமான டிக்கட் பதிவு செய்யப்பட வேண்டியதிருப்பதால், ஊழியர்களின் ஆரோக்கியத்திற்காக, ஒத்துழைப்பிற்காக
5. திரளான மக்கள் கலந்து கொண்டு உயிர்ப் பிக்கப்பட

விமான கட்டணம் நாட்கள் செல்லச்செல்ல உயர்ந்து கொண்டே போவதால் உடனே டிக்கட் பதிவு செய்ய வாஞ்சிக்கிறோம். அந்தமான் போக ஒரு வழி பயண கட்டணம் ரூ.4808. ஊழியர்கள் 5 பேர் போக வர உத்தேசமாக ரூபாய் 48,080 ஆகிறது. தேவன் கிருபையாய் இந்த தேவையை சந்திக்க ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**நவம்பர் மாதம் 6-ம் தியதி** செவ்வாய்கிழமை, கர்த்தருக்குச் சித்த மானால் 6-ம் தியதி தீபாவளி விடுமுறை தினம். Vagavarai, C.S.I Holy Trinity Church-ல் (கேரளா) வைத்து உபவாச ஜெபம் நடத்த பிரயாசப்படுகிறோம். வாசகர் ஜெபிக்க பட்சமாய் கேட்கிறேன்.

**டிசம்பர் மாதம் 1-ம் தியதி** 1-வது சனிக்கிழமை, கர்த்தருக்குச் சித்தமானால் நெல்லை மாவட்டம், வடக்கன் குளத்திலுள்ள விக்டரி அசெம்பிளி ஆப் காட் சபையில் நடைபெறும்.

## தரிசனம் 2019, 2020

ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால் (யாக்கோபு 4:15) 2019, 2020 ஆண்டுகளில் உபவாச ஜெபங்கள் நடத்த உங்கள் சபை கட்டிடத்தை திறந்து தாருங்கள் என்று மிகவும் அன்புடன் கேட்கிறேன்.

**தயவுசெய்து கவனியுங்கள் :** இவ்வித உபவாச ஜெபங்களை நாங்கள் நடத்துவது, **தேவனுடைய அழைப்பும் தரிசனமும்** ஆகும். தூதன் வாசகரில் சிலர் வெளிமாநிலங்களில் சபை ஊழியம் செய்கிறீர்கள் என்பதை அறிவேன். 2018-ம் ஆண்டு 5 வெளி மாநிலங்களில் உபவாச ஜெபங்களை நடத்த தேவன் இரக்கம் பாராட்டிக் கொண்டிருக்கிறார். கர்த்தருக்குச் சித்தமானால் 2019-ம் ஆண்டும் குறைந்தபட்சம் 5 வெளி மாநிலங்களில் இவ்வித **எழுப்புதலுக்காக இதய கதறல்,** உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபத்தை நடத்த வாஞ்சிக்கிறோம்.

குறிப்பாக, குஜராத் மாநிலம், மஹாராஷ்டிரா மாநிலம், ஆந்திர பிரதேசம், கர்நாடகா, கோவா போன்ற இடங்களுக்காக ஜெபிக்கிறோம். உதவி செய்வீர்களா?

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
**வெஸ்லி தேவதாசன்**
(WESLEY DEVADASON)


| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : 04652 403295 | |
| உதவி | : 94897 40295 | காலை 10.00-1.00 வரை |
| ஜெப உதவி | : 94980 30295 | மாலை 02.00-6.00 வரை |
| அலுவலகம் | : 95432 21008 | (ஞாயிறு விடுமுறை) |


## எழுப்புதலுக்காக இதய கதறல் - மேய்

**கிரேஸ் ஏ.ஜி. சபை தஞ்சாவூர் 19.05.2018**

கடந்த வருடமே அருமையான சபையின் போதகர் பாஸ்டர் **ஜெயச்சந்திரன்** அவர்களை தொடர்பு கொண்டு கூட்டங் களை ஒழுங்கு பண்ணினாலும், போதகர் மார்ச் மாதம் நித்திய இளைப்பாறு தலுக்குள் பிரவேசித்தபடியால் மிகுந்த வேதனை யோடிருந்த அவருடைய மனைவி திருமதி டாக்டர் **மனோரமா ஜெயச்சந்திரன்** அவர்களை தொடர்பு கொள்ள முடியாமல், மேய் மாத கூட்டங்களை நடத்த முடியாமல் போய் விடுமோ என்ற சூழ்நிலை ஏற்பட்டது. ஆயினும் ஏப்ரல் மாதம் 27ம் தேதி அருமையான போதகர் மனைவியை சந்தித்து கூட்டத்தை ஒழுங்கு செய்ய கர்த்தர் கிருபை செய்தார்.

தேவனுடைய கிருபையால் 18.05.18 மாலை 3 மணிக்கு புறப்பட்டு நள்ளிரவு சுமார் 1 மணிக்கு தஞ்சாவூர் போய் சேர்ந்தோம். இரவு, சபை விசுவாசி ஒருவரின் தங்கும் விடுதியில் இளைப் பாறினோம்.

உபவாச ஜெபத்தை காலையில் 10 மணிக்கு போதகரின் மனைவி ஜெபித்து ஆரம்பித்து வைத்தார்கள். சபையின் உதவி போதகர்கள் பாடல் மற்றும் ஆராதனையை நேர்த்தியாக நடத்தினார்கள். தொடர்ந்து தரிசன செய்தி, தேசத்திற்காக ஜெபம், தேசத்திற் கான தரிசனம், இறுதிசெய்தி, ஜெபம் எல்லாவற்றையும் நேர்த்தியாக நடத்த அன்பின் ஆண்டவர் இரக்கம் பாராட் டினார். வந்திருந்த ஜனங்களுக்கு இந்த ஜெபம் அதிக பிரயோஜனமாக இருந்தது. உபவாச ஜெபத்தை மிகவும் நேர்த்தியாக ஒழுங்கு செய்திருந்த சபையின் போதகர் டாக்டர் **மனோரமா ஜெயச்சந்திரன்** மற்றும் உதவி போதகர்கள், அவர்கள் குடும்பங் ளுக்காக தேவனை நன்றியோடு துதிக்கி றோம். தேவன் அவர்களையும், ஊழியங் களையும் கிருபையாக ஆசீர்வதிப்பாராக. உபவாச ஜெபம் முடிந்து தங்கும் விடுதிக்கு வந்து உணவருந்தும் போது, விடுதியின் உரிமையாளரும் விசுவாசியு மான சகோதரனின் மனைவி வந்து கூட்டம் ஆசீர்வாதமாக இருந்தது என்று பகிர்ந்து கொண்டார்கள். எங்களை அன்பாக உபசரித்த அந்த குடும்பத் தையும் தேவன் ஆசீர்வதிப்பாராக. இரவு 8 மணிக்கு (19.05.18) புறப்பட்டு அதிகாலை 3 மணியளவில் நாகர்கோவில் வந்து சேர தேவன் இரக்கம் பாராட்டி னார். மிகுந்த ஜெபத்தோடும், அதிக பிரயாசங்களோடும் தேவனுடைய தெளிவான வழிகாட்டுதலின்படியும் நாம் நடத்துகிற இந்த உபவாச ஜெபங்களை தேவன் கிருபையாய் ஆசீர்வதிக்கும்படி அதிக பாரத்தோடு ஜெபிக்குமாறு அதிக அன்பாய் கேட்கிறேன்.

உங்கள் சகோதரன்
**W. சாமுவேல் ஃபின்னி**

## பத்திரிகை செய்திகள்

**திருச்சியில் குமாரசாமி பேட்டி**
### "காவிரி பிரச்சினையை தீர்க்க முழு ஒத்துழைப்பு அளிப்பேன்"

காவிரி விவசாயிகளும், தமிழக விவசாயிகளும் பிரச்சினைகளை சந்தித்து வருகிறார்கள் அவை சரி செய்யப்பட வேண்டும் காவிரி பிரச்சினையை தீர்க்க முழு ஒத்துழைப்பு அளிப்பேன். உச்ச நீதிமன்ற தீர்ப்பை எனது அரசு மட்டுமல்ல, யாராக இருந்தாலும் மதித்து தான் ஆக வேண்டும்.கடந்த 3 ஆண்டுகளாக கர்நாடகாவில் ஆறுகள் வறண்ட போய் கிடந்தன. இதனால் தான் இரு மாநிலங்களிலும் பிரச்சினை உருவானது. ஆனால் இந்த ஆண்டு நல்ல மழை பெய்து எங்கள் மாநிலத்தில் ஆறுகள் நிரம்பும் பட்சத்தில் இந்த பிரச்சினையை தீர்ப்பதில் எந்த சிரமமும் இருக்காது.


**Registered with the Registrar of News Paper**
**For India under R.N.I. TN TAM 11967/'67**
**Date of Publication : 27th of Every month**

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To